MAGMA
General Insurance Limited

வாடிக்கையாளர் தகவல் தாள் / உங்கள் பாலிசியைத் தெரிந்துகொள்ளுங்கள் - ஒன்ஹெல்த்

உங்கள் பாலிசி குறித்த முக்கிய விவரங்களை இந்த ஆவணம் தெரியப்படுத்தும். உங்கள் பாலிசி ஆவணம் மற்றும் பாலிசி அட்டவணையை நீங்கள் அவசியம் படித்துப் பார்க்க வேண்டும்.

வ. எண்.	பட்டப்பெயர்	விளக்கம் (பாலிசி உட்பிரிவு எண் அடுத்த பத்தியில் கொடுக்கப்பட்டுள்ளது)	பாலிசி உட்பிரிவு எண்.
1	இன்ஸ்யூரன்ஸ் புராடெக்ட் / பாலிசி பெயர்	ஒன்ஹெல்த் 10.0	
2	பாலிசி நம்பர்	XXXX	
3	இன்ஸ்யூரன்ஸ் புராடெக்ட் / பாலிசி வகை	**இழப்பீடு மற்றும் நன்மை இரண்டும்** ☐ இழப்பீடு (இந்த பாலிசியின் கீழ் காப்பீடு பெற்றிருப்பவரின் இழப்புகளுக்கு காப்புறுதி தொகை வரை காப்பீடு வழங்கப்படும்.) ☐ நன்மைகள்: இந்த பாலிசியின் கீழ் காப்பீடு பெற்றிருக்கும் நிகழ்வு ஒன்று நிகழ்ந்துவிடும்போது, இந்த இன்ஸ்யூரன்ஸ் பாலிசி குறிப்பிட்ட தொகை ஒன்றை பாலிசியின் கீழ் வழங்கும். ☒ இழப்பீடு மற்றும் நன்மை இரண்டும்: (மேலே சொல்லப்பட்டிருக்கும் இரண்டும் பாலிசியில் சேர்க்கப்பட்டிருக்கும்போது)	
4	**காப்புறுதி தொகை (அடிப்படையில்)** (இத்தொகை வரையில்)	☒ தனிநபர் காப்புறுதி தொகை - பாலிசியின் கீழ் ஒவ்வொரு தனிநபருக்கு தனித்தனியான காப்புறுதி தொகை குறிப்பிடப்பட்டிருத்தல்) அல்லது ☒ ஃபுளோட்டர் காப்புறுதி தொகை - இந்த பாலிசியின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் ஒரு காப்புறுதி தொகையை தனித்தனியாக அல்லது அனைத்து உறுப்பினர்களும் ஒன்றாகப் பயன்படுத்திக் கொள்ளுதல்	
5	**பாலிசி வழங்கும் காப்பீடு** (பாலிசி எதற்கு காப்பீடு வழங்கும்?) (பாலிசி உட்பிரிவு எண்./எண்கள்)	**இந்த வகையான செலவினங்கள்:**	
		உள்-நோயாளி கவனிப்பு: 'உள்-நோயாளி கவனிப்பாக' மருத்துவமனையில் சேர்ந்து தொடர்ந்து 24 மணி நேர காலத்திற்கு கவனிப்பு பெறுதல்.	**2.1 உள்-நோயாளி கவனிப்பு**
		மருத்துவமனை சிகிச்சைக்கு முந்திய மருத்துவ செலவினங்கள்: (மருத்துவமனையில் சேருவதற்கு முன்னர் ஆகும் சிகிச்சை செலவினங்கள்) XX நாட்களுக்கு.	**2.2 மருத்துவமனை சிகிச்சைக்கு முந்திய மருத்துவ செலவினங்கள்**
		மருத்துவமனை சிகிச்சைக்குப் பிந்திய மருத்துவ செலவினங்கள்: (மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆன பிறகு சிகிச்சைக்கு ஆகும் செலவினங்கள்) மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆன தேதியிலிருந்து XX நாட்களுக்குள் ஆகும் செலவினங்கள்.	**2.3 மருத்துவமனை சிகிச்சைக்குப் பிந்திய மருத்துவ செலவினங்கள்**
		தின கவனிப்பு சிகிச்சை: மருத்துவமனையில் சேர்ந்து 24 மணி நேரத்திற்குள் தேவைப்பட்டு செய்யப்படும் பட்டியலிடப்பட்டிருக்கும் செயற்பாடுகள் (தின கவனிப்பு).	**2.4 தின கவனிப்பு சிகிச்சை**
		ரோடு ஆம்புலன்ஸ் காப்பீடு: அவசரக்கால நிகழ்வில் அருகிலிருக்கும் மருத்துவமனைக்கு காப்பீடு பெற்றிருப்பவரை ஆம்புலன்ஸில் அழைத்துச் செல்ல சாலை போக்குவரத்துக்கு ஆகும் நியாயமான ஆம்புலன்ஸ் கட்டணங்கள் ரூ. XX வரை. குறிப்பிடப்பட்டிருக்கும் வரம்பு பிரதி மருத்துவமனை சிகிச்சைக்குப் பொருந்தும்.	**2.5 ரோடு ஆம்புலன்ஸ் காப்பீடு**
		உறுப்பு கொடையாளி செலவினங்கள்: காப்பீடு பெற்றிருப்பவருக்கு மாற்று உடலுறுப்பு பொருத்தும் அறுவை சிகிச்சைக்காக உடலுறுப்பு கொடையாளிக்கு உள் நோயாளியாக ஆகும் மருத்துவ செலவினங்கள்.	**2.6 உறுப்பு கொடையாளி செலவினங்கள்**

		டொமிசிலரி மருத்துவமனை சிகிச்சை: வீட்டில் ஒருவேளை மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ள நேர்ந்தால் மற்றும் அவ்வாறு எடுத்துக்கொள்ளப்படும் மருத்துவ சிகிச்சை குறைந்தபட்சம் 3 நாட்களுக்கு இடைவிடாமல் தொடர்ந்து எடுத்துக்கொள்ளப்படுவதால் ஆகும் மருத்துவ செலைனங்கள்.	**2.7 டொமிசிலரி மருத்துவமனை சிகிச்சை**
		உள்-நோயாளி ஆயூஷ் சிகிச்சை: உள்-நோயாளியாக ஆயுஷ் சிகிச்சை எடுத்துக்கொள்ளும் போது ஆகும் மருத்துவ செலவினங்கள் காப்புறுதி தொகையில் வரை.	**2.8 உள்-நோயாளி ஆயூஷ் சிகிச்சை**
		IVF சிகிச்சை காப்பீடு: IVF சிகிச்சைக்காக ரூ. 1,00,000 வரையில் மருத்துவ செலவினங்களுக்குக் காப்பீடு கிடைக்க இச்சிகிச்சையை 40 வயதிற்குள்ளாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.	**2.9 IVF சிகிச்சை காப்பீடு**
		உடல் பருமன் அறுவை சிகிச்சை காப்பீடு: மருத்துவரீதியாகத் தேவைப்படும் உடல் பருமன் அறுவை சிகிச்சைக்கான மருத்துவ செலவினங்களுக்கு ரூ.1,00,000 வரை காப்பீடு கிடைக்கும்.	**2.10 உடல் பருமன் அறுவை சிகிச்சை காப்பீடு**
		மனநோய் மருத்துவ சிகிச்சை காப்பீடு: குறிப்பிட்ட மனநோய் மருத்துவ நிலைமைகளுக்கு உள்-நோயாளியாக ஆகும் மருத்துவ செலவினங்களுக்கு காப்புறுதி தொகையில் உள்-வரம்பாக ரூ. 50,000 வரை காப்பீடு கிடைக்கும்.	**2.11 மனநோய் மருத்துவ சிகிச்சை காப்பீடு**
		HIV/AIDS காப்பீடு: உள்-நோயாளி மருத்துவமனை சிகிச்சை, தின கவனிப்பு சிகிச்சை மற்றும் மருத்துவமனை சிகிச்சைக்கு முந்திய மற்றும் பிந்திய HIV/AIDS செலவினங்களுக்குக் காப்பீடு கிடைக்கும்.	**2.12 HIV/AIDS காப்பீடு**
		நவீன சிகிச்சைகள் செயற்பாடுகள்: பட்டியலிடப்பட்டிருக்கும் நவீன சிகிச்சை செயற்பாடுகளுக்கு ரூ. XXXX வரை காப்பீடு வரம்பு	**2.13 நவீன சிகிச்சைகள் செயற்பாடுகள்**
		திரள் போனஸ்: திரள் போனஸ் ஆண்டு ஒன்றுக்கு XX% வீதம் சேரும். அதிகபட்சம் 100% வரை.	**2.14 திரள் போனஸ்**
		காப்புறுதி தொகை ரீசார்ஜ்: ஒரு பாலிசி ஆண்டில் முந்தைய கிளெய்ம்கள் செலுத்தப்பட்டதன் காரணமாக அடிப்படை காப்புறுதி தொகையும் திரள் போனஸ் தொகையும் போதாமல் போகும் பட்சத்தில், பாலிசி ஆண்டில் 2-வது கிளெய்ம் முதற்கொண்டு வரம்பற்ற முறைகள் 100% காப்புறுதி தொகையை ரீசார்ஜ் செய்துகொள்ளலாம்	**2.15 காப்புறுதி தொகை ரீசார்ஜ்**
		துணையாக இருப்பவர் நன்மை: காப்பீடு பெற்றிருப்பவர் 12 வயதுக்கும் குறைவானவர் என்றால், அவருடைய மருத்துவமனை சிகிச்சையின் போது, தினசரி ரொக்க நன்மையாக ரூ. XX வழங்கப்படும்	**2.16 துணையாக இருப்பவர் நன்மை**
		உடல்நலத் தகுதி வெகுமதிகள் மற்றும் நன்னிலை சேவைகள்: நடப்பிலிருக்கும் பாலிசி பிரீமியத்தின் 10% வரையில் பாயின்டுகளைச் சம்பாதித்து, அதை இந்த பாலிசியைப் புதுப்பிக்கும் சமயத்தில் பிரீமியத்தில் தள்ளுபடியாகப் பெற்றுக்கொள்ளலாம். பாலிசி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பல்வேறு உடல்நலத் தகுதி நடவடிக்கைகளில் பங்கு பெற்று அல்லது மருத்துவ உடல்நலத் தகுதி பரிசோதனைகள் செய்துகொண்டு பாயின்டுகளைச் சம்பாதித்துக் கொள்ளலாம். டாக்டர் ஆன் கால், சிறப்பு மருத்துவ நிபுணரின் இ-அபிப்பிராயம், ஊட்டச்சத்துகள் குறித்த இ-ஆலோசனைகள் மற்றும் உடல்நலம் சம்பந்தப்பட்ட தகவல் ஆகிய சலுகைகளை நன்னிலை சேவைகளாகப் பெற்றுக்கொள்ளலாம்.	**2.17 உடல்நலத் தகுதி வெகுமதிகள் மற்றும் நன்னிலை சேவைகள்**
		கூடுதல் காப்பீடுகள்	
		தீவிர நோய்களுக்கு காப்பீடு: பாலிசி ஆவணத்தில் 11 தீவிர நோய்கள் என்று பட்டியலிபட்டிருக்கும் நோய்களில் ஒன்று இருப்பதாக நோய் கண்டறியப்பட்டால் காப்புறுதி தொகைக்குச் சமமான தொகை அல்லது	**ஆப்ஷனல் காப்பீடு 1**

		ரூ.10,00,000 இதில் எது குறைவோ அது மொத்த தொகையாக வழங்கப்படும்.	
		தனிநபர் விபத்து காப்பீடு: விபத்து காரணமான காயத்தினால் மரணம் அல்லது நிரந்தர மொத்த இயலாமை ஏற்படும் பட்சத்தில் காப்புறுதி தொகைக்குச் சமமான XX தொகையாக வழங்கப்படும்.	**ஆப்ஷனல் காப்பீடு 2**
		ஒட்டுமொத்த கழிவுத்தொகை: இந்த பாலிசியின் கீழ் கிளெய்ம் செய்யப்படும் பாலிசி வருடத்தில் செலுத்த வேண்டிய தொகைக்கான எங்கள் பொறுப்பு அந்த பாலிசி வருடத்தில் கழிக்க வேண்டிய தொகையான ரூ. XX முழுவதுமாகச் செலவழிக்கப்பட்ட பிறகு மட்டுமே ஆரம்பமாகும்.	**ஆப்ஷனல் காப்பீடு 3**
		தன்விருப்ப இணைதொகை: செய்யப்படும் ஒவ்வொரு கிளெய்மில், அனுமதிக்கப்படும் கிளெய்ம் தொகையில் XX சதவிகித தொகையை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.	**ஆப்ஷனல் காப்பீடு 4**
		மருத்துவமனை கேஷ்: தொடர்ந்து 24 மணி நேரத்திற்கு மருத்துவமனை சிகிச்சை பெற்று முடிந்த ஒவ்வொரு தினத்திற்கு தினசரி ரூ. XXXX வீதம் மொத்த தொகை நன்மை வழங்கப்படும்.	**ஆப்ஷனல் காப்பீடு 5**
		மெடர்னிடி நன்மைகள்: **ஆப்ஷன் A** **பேறுகால காப்பீடு:** காப்பீடு பெற்றிருப்பவரின் குழந்தை பிறப்புக்காக மருத்துவ செலவினங்கள் ரூ. XXXX வரை அனுமதிக்கப்படும். **புதிய குழந்தைக்குக் காப்பீடு:** புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தைக்கான மருத்துவ செலவினங்களுக்கு ரூ. 50,000 வரையில் காப்பீடு கிடைக்கும். **புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தைக்கு தடுப்பூசி:** புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தைக்கு குறிப்பிட்ட தடுப்பூசிகள் போடுவதற்கான செலவினங்களுக்கு ரூ. 25,000 வரையில் காப்பீடு கிடைக்கும். **பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய உள்நோயாளி மருத்துவமனை சிகிச்சை:** பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய உள்நோயாளி மருத்துவ்வமனை சிகிச்சையின்போது மருத்துவச் செலவினங்களுக்கு ரூ. 15,000 காப்பீடு கிடைக்கும். மகப்பேறு காத்திருப்பு காலம் 24 மாதங்கள் **ஆப்ஷன் B** **பேறுகால காப்பீடு:** காப்பீடு பெற்றிருப்பவரின் குழந்தை பிறப்புக்காக மருத்துவ செலவினங்கள் ரூ. XXXX வரை அனுமதிக்கப்படும். **புதிய குழந்தைக்குக் காப்பீடு:** புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தைக்கான மருத்துவ செலவினங்களுக்கு ரூ. 50,000 வரையில் காப்பீடு கிடைக்கும். **புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தைக்கு தடுப்பூசி:** புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தைக்கு குறிப்பிட்ட தடுப்பூசிகள் போடுவதற்கான செலவினங்களுக்கு ரூ. 25,000 வரையில் காப்பீடு கிடைக்கும். **பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய உள்நோயாளி மருத்துவமனை சிகிச்சை:** பிரசவத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய உள்நோயாளி மருத்துவ்வமனை சிகிச்சையின்போது மருத்துவச் செலவினங்களுக்கு ரூ. 15,000 காப்பீடு கிடைக்கும். மகப்பேறு காத்திருப்பு காலம் 12 மாதங்கள்	**ஆப்ஷனல் காப்பீடு 6**
		வீட்டு கவனிப்பு கூடுதல் ரொக்க நன்மை: நாங்கள் அங்கீகரித்திருக்கும் சேவை அளிப்பவர் வீட்டு கவனிப்பு சிகிச்சை வழங்கும் போது தினசரி ரொக்க தொகையாக ரூ. 1,000 நாள் ஒன்றுக்கு வழங்கப்படும்.	**ஆப்ஷனல் காப்பீடு 7**
		செலுத்தப்பட முடியாத செலவினங்கள் காப்பீடு: இந்த பாலிசியின் பிற்சேர்க்கை II-ல் எழுதப்பட்டிருக்கும் ''அட்டவனை I-பாலிசியில் காப்பீடு பெற்றிருக்காத செலவினங்கள் உருப்படி'' பட்டியலிலுள்ள செலவினங்களுக்குக் காப்பீடு வழங்கப்படும்.	**ஆப்ஷனல் காப்பீடு 8**
		ஸ்மார்ட் ஃபிளெக்ஸி சேவர்: கழிவு தொகை கழிக்கப்படுவதைத் தளர்த்தும் நன்மையை நாங்கள் வழங்குவதற்கும் ஒட்டுமொத்த கழிவுத்தொகையுள்ள உங்கள் ஒன்ஹெல்த் 10.0 பாலிசியை	**ஆப்ஷனல் காப்பீடு 9**

		தொடர்ந்திருக்கும் நன்மைகளுள்ள அடிப்படை பாலிசியாக 4 பாலிசி வருடங்களுக்குப் பிறகு மாற்றிக்கொள்ளும் ஆப்ஷனை நாங்கள் உங்களுக்கு வழங்குகிறோம்.	
		ஏர் ஆம்புலன்ஸ் காப்பீடு: நோய்நிலைமை அல்லது காயம் தொடர்பான அவசரக்காலத்தில் போதுமான வசதிகளுடன் அருகிலிருக்கும் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் போக்குவரத்துக்காக ஒரு விமானத்தில் அல்லது ஆம்புலன்ஸாகப் பயன்படுத்த ஏற்ற ஒரு ஹெலிகாப்டரில் செல்லும் செலவினங்களுக்கு ரூ. XXXXXX வரையில் காப்பீடு கிடைக்கும்.	**ஆப்ஷனல் காப்பீடு 10**
		கட்டாய இணை-தொகை செலுத்துதலை நீக்குதல்: இந்த ஆப்ஷனல் நன்மையைத் தேர்ந்தெடுக்கும் போது காப்பீடு பெற்றவர்/காப்பீடு பெற்றிருப்பவர் கட்டாய இணை-தொகை செலுத்துதலைத் தளர்த்திக் கொள்ளலாம், அதாவது, பாலிசி ஆரம்ப தேதியில் காப்பீடு பெற்றிருப்பவரின் வயது 61 வருடங்கள் அல்லது அதற்கும் மிகையாக இருந்தால், அனுமதிக்கப்படும் கிளெய்ம் தொகை மீது இந்த கட்டாய இணை தொகை செலுத்த வேண்டியிருப்பதைத் தளர்த்திக் கொள்ளலாம்.	**ஆப்ஷனல் காப்பீடு 11**
		வெளி நோயாளி காப்பீடு: வெளி நோயாளி அடிப்படையில், மருத்துவ ரீதியாகத் தேவைப்படும் கன்சல்டேஷன்கள், டயக்னோஸ்டிக் பரிசோதனைகள் மற்றும் மருந்துகளுக்கான மருத்துவ செலவினங்களுக்கு ரூ. XXX வரை காப்பீடு கிடைக்கும்.	**ஆப்ஷனல் காப்பீடு 12**
		சுவிட்ச் ஆன் சுவிட்ச் ஆஃப் காப்பீடு: நீங்கள் ஒருவேளை இந்த காப்பீட்டைத் தேரிந்தெடுக்கும் பட்சத்தில், நீங்கள் இந்தியாவிற்கு வெளியில் பயணப்பட நேர்ந்தால் அதுபோது நீங்கள் எழுத்துபூர்வமாக எங்களிடம் கோரிக்கை செய்துகொள்ளும்போது, ஒரு பாலிசி ஆண்டில் அதிகபட்சம் தொடர்ச்சியான 90 நாட்களுக்கு உங்கள் பாலிசியின் புவியியல் வரம்பை உலகளாவியதாக (வெர்ல்ட்வைட்) மாற்றுவோம், கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் நன்மைகளுக்கும் மற்ற இதர பிற அனைத்து விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்தியாவிற்கு வெளியில் உங்களுக்கு ஏற்படும் மருத்துவ செலவினங்களுக்கு ரூ. XXX வரையில் நாங்கள் காப்பீடு வழங்குவோம்.	**ஆப்ஷனல் காப்பீடு 13**
		குளோபல் காப்பீடு: காப்பீடு பெற்றிருப்பவருக்கு நோயிருப்பது இந்தியாவில் கண்டறியப்பட்டு சிகிச்சைக்காக இந்தியாவிற்கு வெளியில் பயணித்து வெளிநாட்டில் மேற்கொள்ளும் மருத்துவ செலவினங்களுக்கு காப்பீடு கிடைக்கும்.	**ஆப்ஷனல் காப்பீடு 14**
		கேடராக்ட் (கண்புரை) சிகிச்சைக்கான உயர்த்தப்பட்ட உப-வரம்புகள்: காப்பீடு பெற்றிருப்பவர் / காப்பீடு பெற்றிருக்கும் நபர் கேடராக்ட் அறுவை சிகிச்சைக்கான வரம்புகளை உயர்த்திக்கொள்ள இந்த ஆப்ஷன் நன்மை அனுமதிக்கும். **உப-வரம்புகள்:** XXXXXXX.	**ஆப்ஷனல் காப்பீடு 15**
		அதிகரிக்கப்பட்ட காப்பீடு: இந்த ஆப்ஷனல் காப்பீட்டுடன், காப்புறுதி தொகை அடிப்படை காப்புறுதி தொகைக்கு 2 மடங்காக இருக்கும், பாலிசியின் வாழ்நாளில் செய்யப்படும் முதல் கிளெய்மிற்கு இது பொருந்தும்	**ஆப்ஷனல் காப்பீடு 16**
		நீடித்து உழைக்கும் சாதனங்களுக்குக் காப்பீடு: இந்த ஆப்ஷனல் காப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் போது, பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் நீடித்து உழைக்கும் மருத்துவ சாதனங்களை சொந்தமாக வாங்குவதற்கு அல்லது வாடகையில் பெற்றுக்கொள்வதற்கு ஆகும் செலவினங்களை நாங்கள் திருப்பிச் செலுத்துவோம் என்றாலும், இது கூட்டு உப-வரம்பு தொகையான ரூ. 5 இலட்சம் அல்லது அடிப்படை காப்புறுதி தொகை இதில் எது குறைவோ அதுவரையில் இருக்கும்.	**ஆப்ஷனல் காப்பீடு 17**
		வாடகைத் தாய் காப்பீடு: பாலிசி காலவரையான 36 மாத காலத்தில் 25-35 வயதுக்குட்பட்ட ஒரு தன்னலமற்ற வாடகைத் தாயாக இருக்கும் காப்பீடு பெற்றிருப்பவருக்கு இந்த நன்மை கிடைக்கும். உப-வரம்புகள் கீழே கொடுக்கபப்ட்டுள்ளன:- காப்புறுதி தொகை ரூ.7.5 இலட்சம் வரை - ரூ. 25,000 காப்புறுதி தொகை 7.5 இலட்சம் முதல் 25 இலட்சம் வரை - ரூ. 50,000	**ஆப்ஷனல் காப்பீடு 18**

		காப்புறுதி தொகை 25 இலட்சத்திற்கு மேல் - 1,00,000	
		ஓசைட் கொடையாளி காப்பீடு: பாலிசி காலவரையில் அல்லது 12 மாத காலத்திற்கு 23-35 வயதுக்குட்பட்ட ஓசைட் கொளையாளி ஒருவருக்கு இந்த காப்பீட்டு நன்மை கிடைக்கும். உப-வரம்புகள் கீழே கொடுக்கபப்ட்டுள்ளன:- காப்புறுதி தொகை ரூ. 7.5 இலட்சம் வரை - ரூ. 25,000 காப்புறுதி தொகை 7.5 இலட்சம் முதல் 25 இலட்சம் வரை - ரூ. 50,000 காப்புறுதி தொகை 25 இலட்சத்திற்கு மேல் - 1,00,000	**ஆப்ஷனல் காப்பீடு 19**
		போனஸ் பூஸ்டர் பிளஸ்: இந்த ஆப்ஷனல் காப்பீட்டில், இந்த பாலிசியின் கீழ் பொருந்தும் போனஸ் வரம்புகள் பிரதி வருடம் அடிப்படை காப்புறுதி தொகையில் 100%, இது அதிகபட்சம் காப்புறுதி தொகையில் 700% வரை இருக்கும்.	**ஆப்ஷனல் காப்பீடு 20**
		இன்ஃபினைட் போனஸ் பூஸ்டர்: இந்த ஆப்ஷனல் காப்பீட்டில், இந்த பாலிசியின் கீழ் பொருந்தும் போனஸ் வரம்புகள் பிரதி வருடம் அடிப்படை காப்புறுதி தொகையில் 100%, இது அதிகபட்சம் காப்புறுதி தொகையில் வரம்பற்ற காப்புறுதி தொகையாக இருக்கும்.	**ஆப்ஷனல் காப்பீடு 21**
		காப்புறுதி தொகை வரம்பில்லாத தடவை எக்ஸ்ட்ரா ரீசார்ஜ் வசதி: ஒரு பாலிசி வருடத்தில் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கும் கிளெய்ம்களினால் அடிப்படை காப்புறுதி தொகை மற்றும் நோ கிளெய்ம் போனஸ் தொகை ஒருவேளை போதவில்லை என்றால் வரம்பில்லாத தடவையில் அடிப்படை காப்புறுதி தொகையை 150% வரையில் ரீசார்ஜ் செய்வோம்.	**ஆப்ஷனல் காப்பீடு 22**
		இன்ஸ்டா கவர்: பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் நோய்கள் / நோய்நிலைமை / சுகக்கேடுகளுக்கு காப்பேறு பெற்றிருப்பவர்(கள்) உள்-நோயாளியாக அல்லது தின கவனிப்பு சிகிச்சை அல்லது ஆயுஷ் சிகிச்சையை மருத்துவமனையில் சேர்ந்து பெற்றுக்கொள்ளும் போது பாலிசி அட்டவணையில் எழுதப்பட்டிருப்பது போல் பாலிசி ஆரம்பமாகும் 1வது தேதியிலிருந்து மேற்கொள்ளும் மருத்துவ சிகிச்சை செலவினங்களுக்கு நிறுவனம் இழப்பீடு வழங்கும். 1. அஸ்துமா 2. ஹைபர்டென்ஷன் என்று மருத்துவ முறையில் அறியப்படும் இரத்த அழுத்தம் 3. ஹைபர்லிபிடிமியா எனப்படும் கொலஸ்டிரால் 4. நீரிழிவு நோய் 5. உடல் பருமன் 6. கொரோனரி ஆர்டரி டிசீஸ் பிடிசிஏ வுடன் 7. கொரோனரி ஆர்டரி பைபாஸ் கிராஃப்ட் 8. நாள்பட்ட நுறையீரல் தடுப்பு நோய் (சிஓபிடி) காப்பீட்டிற்கான ஆப்ஷன் 1. அனைத்து நோய்கள் (இன்ஸ்டா8) 2. முதல் நான்று நோய்கள் (இன்ஸ்டா4)	**ஆப்ஷனல் காப்பீடு 23**
		வரம்பற்ற கவனிப்பு: காப்பீடு பெற்றிருப்பவர் கீழ்க்கண்ட பிரிவுகளில் மேற்கொள்ளும் உள்-நோயாளி / தின கவனிப்பு செயல்பாடுகள் / சிகிச்சை / உள்-நோயாளி ஆயுஷ் மருத்துவமனை சிகிச்சை செலவினங்களுக்கு இந்த பாலிசியின் வாழ்நாளில் செய்யப்படும் ஒரு கிளெய்மிற்கு பாலிசிதாரர் கேட்டுக்கொள்ளும் போது, காப்புறுதி தொகை மீது எந்த ஒரு வரம்புகளும் இல்லாமல் நாங்கள் மருத்துவ செலவினங்களுக்கு இழப்பீடு வழங்குவோம்.	**ஆப்ஷனல் காப்பீடு 24**
		எதிர்கால காப்பீடு: ஆரம்ப காத்திருப்பு காலம், ஏற்கனவே இருக்கும் நோய்களுக்கான (பிஇடி) காத்திருப்பு காலம், குறிப்பிட்ட நோய்களுக்கான காத்திருக்கும் காலம் மற்றும் மகப்பேறு காத்திருப்பு காலம் (மகப்பேறு ஆப்ஷன்/கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால்) வாழ்க்கைத் துணை மற்றும் குழந்தைகளுக்கும் இவர் எதிர்காலத்தில் சேர்க்கப்படும் போது இவ்வாறு சேர்க்கப்படும் நபருக்கு நுழைவு	**ஆப்ஷனல் காப்பீடு 25**

		காலத்தில் 35 வயதுக்கு மிகையாக இருக்கக் கூடாது உள்ளிட்ட உறுப்பினரால் பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து காத்திருப்பு காலங்களுக்கும் தொடர்ச்சியான நன்மையை நாங்கள் வழங்குவோம்.	
		தங்கும் அறை வரம்பில் மாற்றம்: இந்த ஆப்ஷனல் காப்பீட்டை காப்பீடு பெற்றிருப்பவர் தேர்ந்தெடுத்திருந்தால், காப்பீடு பெற்றிருப்பவர் சிங்கிள் பிரைவேட் ஏசி ரூமிற்குப் பதிலாக கீழ்க்கண்ட ஆப்ஷன்களைப் பெறலாம்: A. அறை வாடகை தகுதிக்கூற்றை வேறு அறை பிரிவுகளுக்கு எவ்விதமான கட்டுப்பாடும் இல்லாமல் மாற்றிக்கொள்ளலாம், அல்லது B. அறை வாடகை தகுதிக்கூற்றை இரட்டைப் பகிர்வு அறைக்கும் மாற்றிக்கொள்ளலாம்	**ஆப்ஷனல் காப்பீடு 26**
		ஸ்மார்ட் நெட்வொர்க் நன்மை: இந்த ஆப்ஷனல் காப்பீட்டைப் பெற்றுக்கொள்ளும் போது, 'ஸ்மார்ட் நெட்வொர்க்' பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் மருத்துவமனைகளில் மட்டும் பிரிவு உள்-நோயாளி கவனிப்பு கீழ் பொருந்துவது போல் பாலிசிதாரர் கேஷ்லெஸ் சிகிசைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அவசரக்கால மருத்துவமனை சிகிச்சைகளுக்கு பாலிசிதாரர் எந்த ஒரு மருத்துவமனையிலும் சேர்ந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம்.	**ஆப்ஷனல் காப்பீடு 27**
		முதல் முப்பது நாட்கள் காத்திருக்கும் காலத்தைக் குறைத்தல்: இந்த ஆப்ஷனல் நன்மையைத் தேர்ந்தெடுக்கும் போது காப்பீடு பெற்றிருப்பவர் / காப்பீடு பெற்றிருக்கும் நபர் முதல் முப்பது நாட்கள் காத்திருக்கும் காலத்தை (குறியீடு - எக்செல்03) XXXXX நாட்களாகக் குறைத்துக்கொள்ள முடியும்.	**ஆப்ஷனல் காப்பீடு 28**
		குறிப்பிட்ட நோய்களுக்கான காத்திற்குக்கும் காலத்தைக் குறைத்தல்: இந்த ஆப்ஷனல் நன்மையைத் தேர்ந்தெடுக்கும் போது காப்பீடு பெற்றிருப்பவர் / காப்பீடு பெற்றிருக்கும் நபர் குறிப்பிட்ட நோய்கள் காத்திருக்கும் காலத்தை ஒரு வருடமாகக் குறைத்துக்கொள்ள முடியும்.	**ஆப்ஷனல் காப்பீடு 29**
		ஏற்கனவே இருக்கும் நோய்களுக்கான காத்திருப்பு காலத்தைக் குறைத்தல் (இன்ஸ்டா கவரில் பட்டியலிடப்பட்டிருப்பவை தவிர்த்து): இந்த ஆப்ஷனல் நன்மையைத் தேர்ந்தெடுக்கும் போது காப்பீடு பெற்றிருப்பவர் / காப்பீடு பெற்றிருக்கும் நபர் ஏற்கனவே இருக்கும் நோய்கள் காத்திருக்கும் காலத்தை XXXXX வருடம் (வருடங்கள்) / நாட்களாகக் குறைத்துக்கொள்ள முடியும்	**ஆப்ஷனல் காப்பீடு 30**
		குணமடையும் நன்மை : 15 நாட்களுக்கு மிகையான காலத்திற்கு மருத்துவமனை சிகிச்சை பெற்றதைத் தொடர்ந்து குணமடையும் நன்மையாக மொத்த தொகையாக ரூ. 20,000/- வழங்கப்படும்.	**ஆப்ஷனல் காப்பீடு 31**
		என்ஹான்ஸ்ட் ரோடு ஆம்புலன்ஸ் காப்பீடு: இந்த ஆப்ஷனல் நன்மையைத் தேர்ந்தெடுக்கும் போது காப்பீடு பெற்றிருப்பவர் / காப்பீடு பெற்றிருக்கும் நபர் பிரிவு 2.5 ன் கீழ் பிரதி மருத்துவமனை சிகிச்சைக்கான ரோடு ஆம்புலன்ஸ் காப்பீட்டை ரூ. 10,000 வரை உயர்த்திக்கொள்ள முடியும்.	**ஆப்ஷனல் காப்பீடு 32**
		நவீன சிகிச்சைகள் செயற்பாடுகள்: இந்த ஆப்ஷனல் நன்மையைத் தேர்ந்தெடுக்கும் போது காப்பீடு பெற்றிருப்பவர் / காப்பீடு பெற்றிருக்கும் நபர் பிரிவு 2.13 ன் கீழ் உள்ள நவீன சிகிச்சை முறைகளின் வரம்புகளை காப்புறுதி தொகை / 1 லட்சம் வரை அதிகரித்துக்கொள்ள / குறைத்துக்கொள்ள முடியும்.	**ஆப்ஷனல் காப்பீடு 33**
		உங்கள் விலையை உறுதிசெய்துகொள்ளுதல்: இந்த ஆப்ஷனல் காப்பீடு பெற்றிருக்கும்போது, பிரிவுகள் 2.1 முதல் 2.13 கீழ் செய்யப்படும் கிளெய்ம்கள் வழங்கப்படும் வரை காப்பீடு பெற்றிருப்பவர் வயது பாலிசி வாங்கப்பட்டபோது இருந்த வயது அளவே கருதப்படும்.	**ஆப்ஷனல் காப்பீடு 34**
		சாலை போக்குவரத்து விபத்திற்கான காப்பீடு தகுதி அறை: இந்த ஆப்ஷனல் காப்பீடு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்போது, ஒரு கடுமையான சாலை போக்குவரத்து விபத்து காயத்தின் சிகிச்சைக்காக மருத்துவனையின் சேர்க்கப்பட்டிருக்கும்போது காப்பீடு தகுதி அறை	**ஆப்ஷனல் காப்பீடு 35**

		கட்டுப்பாடு எதுவும் இல்லாமல் தானாகவே எந்த அறைப்பிரிவிற்கும் மாற்றப்படும்.	
		அனைத்தும் செலுத்தப்படும்: இந்த ஆப்ஷனல் காப்பீடு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்போது, செலவினங்கள் நியாயமானதாகவும் வழக்கமானதாகவும் இருக்கும் பட்சத்தில், பிரிவு 2.1 (உள்நோயாளி கவனிப்பு) மற்றும் பிரிவு 2.4 (தின கவனிப்பு சிகிச்சை) ஆகியவற்றின் கீழ் விவரங்கள் அளிக்கப்பட்டிருக்கும் உங்கள் மருத்துவமனை பில்லில் பட்டியலிடப்பட்டுள்ளவைகளுக்கு நாங்கள் தொகை செலுத்துவோம்.	**ஆப்ஷனல் காப்பீடு 36**
		உங்கள் காப்பீட்டை உயர்த்திக்கொள்ளுங்கள்: இந்த ஆப்ஷனல் காப்பீடு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும்போது, இப்பாலிசியின் ஆயுட்காலத்தில் ஒரு தடவை பிரிவு 2.1 (உள்நோயாளி கவனிப்பு) மற்றும் பிரிவு 2.4 (தின கவனிப்பு சிகிச்சை) ஆகியவற்றின் கீழ் உங்கள் காப்புறுதி தொகையை உயர்த்திக்கொள்ளும் வசதி உங்களுக்கு வழங்கப்படும். பாலிசியைப் புதுப்பித்துக்கொள்ளும் சமயத்தில் அல்லது கிளெய்ம் ஒன்றைத் தாக்கல் செய்யும் சமயத்தில் நீங்கள் இந்த ஆப்ஷனை பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் காப்புறுதி தொகையை ரூ. 20 லட்சம், 50 லட்சம் அல்லது ஒரு கோடி ஆக நீங்கள் உயர்த்திக்கொள்ள முடியும். ஒருவேளை இந்த காப்பீட்டை விபத்து காயங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பட்சத்தில், அடுத்தடுத்த புதுப்பித்தல்களுக்கு உங்கள் தற்போதைய காப்புறுதி தொகையையே தொடரலாம். ஒருவேளை இந்த காப்பீட்டை விபத்து காயங்கள் அல்லாத நோய்களுக்காகப் பயன்படுத்தப்படும் பட்சத்தில், அடுத்தடுத்த புதுப்பித்தல்களுக்கு நீங்கள் அதிகரிக்கப்பட்ட காப்புறுதி தொகையை தொடர வேண்டும்.	**ஆப்ஷனல் காப்பீடு 37**
		'நோ ஆக்டிவ் லைன் ஆஃப் டிரீட்மென்ட்' தளர்த்துதல்: இந்த ஆப்ஷனல் காப்பீட்டை ஒருவேளை தேர்ந்தெடுத்திருந்தால், ஏதோ ஒரு நோய் அல்லது காயம் இருக்கும் சாதகமான சான்றுகள் இல்லாவிட்டாலும் கூட, அதற்கு மருத்துவ ரீதியாகத் தேவைப்பட்டு மருத்துவமனையில் தொடர் கண்காணிப்பு தேவைப்பட்டால், நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை தொடர்பான செலவுகளுக்கு நாங்கள் காப்பீடு வழங்குவோம். மருத்துவ அறிகுறிகள் எதுவுமில்லாததால் ஓபிடி அடிப்படையில் பெறப்படும் மருத்துவ நோய் கண்டறிதல் செயல்பாடுகளுக்கு இந்த நன்மை பொருந்தாது.	**ஆப்ஷனல் காப்பீடு 38**
		வாழ்க்கைத் தொழில் சார்ந்த கவனிப்பு இந்த ஆப்ஷனல் காப்பீட்டை ஒருவேளை தேர்ந்தெடுத்திருந்தால், கீழே பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் வாழ்க்கைத் தொழில் சார்ந்த அபாயங்களுடன் சம்பந்தப்பட்ட செலவினங்களுக்கு எதிராக கூடுதல் காப்பீடு வழங்குவோம். ஒரு பாலிசியில் ஒரு வருடத்திற்கு அதிகபட்சம் 2 காப்பீடு பெற்றிருக்கும் நபர்களுக்கு இந்த காப்பீடு வழங்கப்படும். கூடுதல் காப்பீடு 1. ஐடி தொழில்முறையாளர்கள் 2. கடை உரிமையாளர்	**ஆப்ஷனல் காப்பீடு 39**
		வருடாந்திர ஹெல்த் செக்-அப் - தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திட்டம் அடிப்படையில் பிரதி பாலிசி ஆண்டில் காப்பீடு பெற்றிருப்பவர்களுக்கு வருடாந்திர ஹெல்த் செக்-அப் வசதி கிடைக்கும்	**ஆப்ஷனல் காப்பீடு 40**
6	**விலக்கல்கள்: (இந்த பாலிசியில் எவற்றிற்கு காப்பீடு கிடைக்காது)**	வழக்கமான விலக்கல்கள் 1. ஆய்வு & மதிப்பிடுதல் (குறியீடு - எக்செல்04) 2. ஓய்வு கவனிப்பு, மறுவாழ்வு மற்றும் உடல் தேறுதல் (குறியீடு - எக்செல் 05) 3. பாலின-மாற்றம் சிகிச்சைகள் (குறியீடு - எக்செல்07) 4. ஒப்பணை அல்லது பிளாஸ்டிக் சர்ஜரி (குறியீடு - எக்செல்08) 5. அபாயகரமான அல்லது வீர விளையாட்டுகள்: (குறியீடு - எக்செல்09) 6. சட்ட விதிமுறைகளுக்கு முரணானவை (குறியீடு - எக்செல்10) 7. விலக்கப்பட்டவைகளில் காணப்படுபவை (குறியீடு - எக்செல்11) 8. குடிப்பழக்கம், மருந்து அல்லது போதைப் பொருள்கள் துஷ்பிரயோகம் அல்லது அதற்கு அடிமையாக இருக்கும் நிலைமை மற்றும் அதன் விளைவுகளால் பாதிப்பு.	பிரிவு 3

		9. ஹெல்த் ஹைட்ரோஸ், நேச்சர் க்யூர் கிளினிக்குகள், ஸ்பாக்கள் அல்லது அவை போன்ற அமைப்புகளில் சிகிச்சை எடுத்துக்கொள்ளுதல் அல்லது அது போன்ற அமைப்புகளில் பிரைவேட் பெட்ஸ் நர்ஸிங் ஹோம் என்று பதிவு செய்யப்பட்டிருத்தல் அல்லது இது போன்ற இடங்களில் அனுமதி முழுமையாக அல்லது பகுதியாக குடும்ப வசதியாக செய்யப்பட்டிருத்தல். (குறியீடு - எக்செல்13) 10. துணை உணவுப் பொருள்கள் அல்லது பண்டங்கள் பிரிஸ்கிரிப்ஷன் இல்லாமல் வாங்க முடிபவை, அதில் இவை மட்டுமே அல்லாமல் அடங்குபவை வைட்டமின்கள், மினரல்கள் மற்றும் ஆர்கானிக் பண்டங்கள் இவை மருத்துவமனை கவனிப்பில் ஒரு பகுதியாக அல்லது தின கவனிப்பு நடவடிக்கையில் ஒன்றாக எழுதிக் கொடுத்திருக்காத பட்சத்தில். (குறியீடு - எக்செல்14) 11. ஒளிக்கதிர் கோட்டஞ்சார்ந்த தவறு (குறியீடு - எக்செல்15) 12. நிரூபிக்கப்படாத சிகிச்சைகள் (குறியீடு - எக்செல்16) 13. மலட்டுத்தன்மை மற்றும் கருத்தரியாமை (குறியீடு - எக்செல்17) 14. பேறுகால செலவினங்கள் (குறியீடு - எக்செல்18) கவனிக்கவும்: இந்த விலக்கல் பேறுகால நன்மைகளுக்குப் பொருந்தாது (ஆப்ஷனல் காப்பீடு 6) குறிப்பிட்ட விலக்கல்கள் 1. ஏதாவது மாற்று சிகிச்சை பிரிவு 2.8 -ன் (ஆயுஷ் சிகிச்சை) கீழ் கிடைக்கும் நன்மைகளைத் தவிர்த்து 2. மருத்துவமனையில் தங்கியிருக்கும் கட்டணங்களுடன் தொடர்புடைய செலவினங்கள், காப்பீடு பெறுபவை என்று தெளிவாகக் குறிப்பிடப்படாத போது. எந்த ஒரு தலைப்பின் கீழ் சேவைக் கட்டணங்கள் என்று மருத்துவமனை வசூலிப்பவை. இந்த பாலிசியின் பிற்சேர்க்கை II-ல் விலக்கப்பட்ட செலவினங்களின் முழுமையான பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. 3. நோயாளி தாவர நிலையில் இருப்பதை கவனித்துக்கொள்ளும் மருத்துவர் உறுதியாகத் தெரிவித்த பிறகும் கூட, அவரைத் தக்க வைத்துக்கொள்ளும்விதமாக லைஃப் சப்போர்ட் மெஷின் பயன்பாடு உட்பட செயற்கை வாழ்க்கையைப் பராமரிக்க ஆகும் செலவினங்கள். 4. ஒரு நோய் நிலை அல்லது பிணி அல்லது விபத்து காரணமாக அவசியப்படும் சுன்னத்து தவிர்த்து செய்யப்படும் சுன்னத்து செலவினங்கள். 5. நியூகிளியர் அல்லது இரசாயன மாசு, போர், கிளர்ச்சி, எழுச்சி அல்லது வன்முறை தக்குதல் நிகழ்வுகள் (இயற்கை பேரிடர் அல்லது பேரழிவு தவிர்த்தவை) ஆகியவற்றால் ஏற்பட்டிருக்கும் பிணி அல்லது காயங்களுக்கான சிகிச்சை செலவினங்கள். 6. வெளிப்புற பிறவி கோளாறுகளுக்கான சிகிச்சை. 7. ஓபிடி சிகிச்சையின் ஒரு பகுதியாக எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கும் அல்லது அறுவை சிகிச்சைக்கான டிரெஸ்ஸிங்களாக கொடுக்கப்பட்டு மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகும் போது கூடவே அவற்றை வீட்டிற்கு எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கும் போது, அது எந்த நிலைமைக்கானதாக இருந்தாலும், மற்றும் அது மேலே சொல்லப்பட்டிருக்கும் பிரிவு 2.3-ன் கீழ் மருத்துவமனை சிகிச்சைக்குப் பிந்திய மருத்துவ செலவினங்களில் அடங்கியதாக இருப்பவை தவிர்த்திருக்கும். இந்த விலக்கல் வெளி நோயாளி காப்பீடுக்குப் பொருந்தாது (ஆப்ஷனல் காப்பீடு 12) 8. வழக்கமான கண் பரிசோதனைகள், கான்டாக்ட் லென்ஸுகள், மூக்குக் கண்ணாடிகள், காது கேட்கும் கருவிகள், டெஞ்சர்கள் மற்றும் செயற்கை பற்களுக்கு நாங்கள் தொகை செலுத்த மாட்டோம். இந்த விலக்கல் வெளி நோயாளி காப்பீடுக்குப் பொருந்தாது (ஆப்ஷனல் காப்பீடு 12) 9. கீழேயுள்ளவைகளிலிருந்து எழும் மற்றும்/அல்லது குரோன்ஸ் நோய், அல்சரேடிவ் கோலிடைஸ் (குடல்புண் அழற்சி) , சிஸ்டிக் கிட்னிஸ் (கொப்புளச் சிறுநீரகங்கள்), நியூரோஃபைப்ரோமடோசிஸ், ஃபேக்டர் வி லீய்டென் த்ரோம்போஃபிலியா, ஃபமிலியல் ஹைபர்கொலெஸ்டிரோலிமியா,	

		ஹீமோஃபிலியா, ஹெரிடிடரி ஃப்ரக்டோஸ் இண்டாலரென்ஸ், ஹெரிடிடரி ஹிமோக்ரோமடோசிஸ், ஹெரிடிடரி ஸ்பிரோசைடோசிஸ்க்காக எடுத்துக்கொள்ளப்படும் சிகிச்சைகள். 10. மருத்துவமனை சிகிச்சைக்கு முன்னதாக அல்லது மருத்துவமனை சிகிச்சைக்குப் பிறகு பெற்றுக்கொள்ளப்படும் பிரைவேட் நர்சிங் / வேலையாள் கட்டணங்கள். 11. பிரிஸ்கிரிப்ஷனில் எழுதிக்கொடுக்கப்படாத மருந்துகள் அல்லது சிகிச்சை. 12. உடல்நலத் தகுதி சான்றிதழ் வழங்குதல் அல்லது உடல்நலத் தகுதி பரிசோதனைகள். 13. எப்பொழுதாவது மருத்துவமனையில் சிகிச்சை பெற்றது / நோய் சம்பந்தமான ஆவணங்களைக் கேட்டுப் பெறுவதற்காக செலுத்தப்பட்ட கட்டணங்கள். 14. சிபிஏபி, சிஏபிடி, இன்ஃப்யூஸன் பம்ப் சிகிச்சை மற்றும் / அல்லது நோய் கண்டறிவதற்குப் பயன்படுத்தப்படும் வெளி மற்றும் /அல்லது நீடித்துழைக்கும் மருத்துவ / மருத்துவம் சாராத சாதனங்கள். 15. ஆம்புலேடரி கருவிகள், வாக்கர்கள், கிரச்செஸ், பெல்டுகள், காலர்கள், தொப்பிகள், ஸ்பிலின்டுகள், ஸ்லிங்குகள், பிரேஸுகள், ஸ்டாக்கிங்குகள் அவை எப்படிப்பட்டதாக இருந்தாலும், டயபெடிக் காலணிகள், குளுகோமீட்டர் / தெர்மாமீட்டர் மற்றும் பிறகு வீட்டில் பயன்படுத்த ஏற்றவாறு இருக்கும் பொருட்கள். ஆப்ஷனல் காப்பீடு 17 - நீடித்துழைக்கும் உபகரணங்கள் காப்பீட்டில் சேர்க்கப்பட்டிருப்பவை தவிர்த்து. 16. ஓபிடி சிகிச்சைக்கு காப்பீடு கிடைக்காது. என்றாலும், இந்த விலக்கல் கீழ்க்கண்டவைகளில் பொருந்தாது: ஆப்ஷனல் காப்பீடு 12, வெளிநோயாளி காப்பீடு மற்றும் ஆப்ஷனல் காப்பீடு 6, மகப்பேறு நன்மைகள் 17. நோய் தடுப்பு முறையுடன் சம்பந்தப்பட்ட நோய்த்தடுப்பு ஊசிமருந்து மற்றும் நோய்த்தடுப்பாற்றலுக்கான தடுப்பூசி உள்ளிட்ட நோய்த்தடுப்பு ஏற்பாடுகள், இதில் புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தைக்கு தடுப்பூசி போடுதல், ஆப்ஷனல் காப்பீடு 6 - மகப்பேறு நன்மைகள்- விலக்கப்படும். 18. தற்கொலை முயற்சி உள்ளிட்ட, சுயமாக வேண்டுமென்றே செய்துகொண்ட காயம், அதனால் விளையும் மற்றும் அதற்கான சிகிச்சை. 19. தூக்கத்தில் மூச்சுத்திணறல், குறட்டை விடுதல் அல்லது தூக்கத்துடன் சம்பந்தப்பட்ட சுவாச பிரச்சனைகளுக்கான சிகிச்சை. 20. இந்தியாவிற்கு வெளியில் பெறப்பட்டிருக்கும் சிகிச்சை எதற்கும். இந்த விலக்கல் ஆப்ஷனல் காப்பீடு 13 க்குப் பொருந்தாது. சுவிட்ச் ஆன் சுவிட்ச் ஆஃப் காப்பீடு மற்றும் ஆப்ஷனல் காப்பீடு 14 குளோபல் காப்பீடு 21. இந்திய மருத்துவக் கழகத்தால் அங்கீகரிக்கப்படாத மருத்துவர் வழங்கியிருக்கும் சிகிச்சை. இந்த விலக்கல் ஆப்ஷனல் காப்பீடு 13 க்குப் பொருந்தாது. சுவிட்ச் ஆன் சுவிட்ச் ஆஃப் காப்பீடு மற்றும் ஆப்ஷனல் காப்பீடு 14 குளோபல் காப்பீடு. 22. ஒரே வீட்டில் குடியிருக்கும் மருத்துவர் அல்லது காப்பீடு பெற்றிருப்பவர் குடும்ப உறுப்பினராக இருக்கும் மருத்துவர் அளிக்கும் சிகிச்சை. 23. ஒரு நோய்நிலை அல்லது காயம், அதற்காக மருத்துவமனை சிகிச்சை தேவைப்பட்டாலும் அல்லது தேவைப்படாவிட்டாலும், அந்த நோய் அல்லது காயத்துடன் சம்பந்தப்பட்டிருக்காத அல்லது அதற்கானதானாக இல்லாத வகையில் செய்துகொள்ளப்பட்டிருக்கும் எக்ஸ்-ரே அல்லது மருத்துவ பரிசோதனைச்சாலை பரிசோதனைகள் அல்லது இதர பிற நோய்கண்டறிதல் பரிசோதனைகள். இந்த விலக்கல் ஆப்ஷனல் காப்பீடு 38 க்குப் பொருந்தாது. 'நோ ஆக்டிவ் லைன் ஆஃப் டிரீட்மென்ட்' தளர்த்துதல்.	

		ஆப்ஷனல் காப்பீடு 2 க்குப் பொருந்தும் கூடுதல் விலக்கல்கள், தனிநபர் விபத்து காப்பீடு • மதுபான துஷ்பிரயோகம் அல்லது தவறான பயன்பாடு உள்ளிட்ட எந்தவொரு பொருளின் துஷ்பிரயோகத்தால் ஏற்படும் அடிமையாக்கும் நிலைகள் மற்றும் கோளாறுகள் தொடர்பான காயம் அல்லது சிகிச்சை. • சாகச விளையாட்டுகளில் பங்கேற்பு. • காப்பீடு பெற்றிருப்பவர் குற்றவியல் நோக்கத்துடன் சட்ட விதிமுறைகளை மீறும் செயல் அல்லது ஏதேனும் கலவரங்கள், உள்நாட்டு குழப்பங்கள் அல்லது பெருங்குற்றங்களில் பங்கேற்றல். • வேண்டுமென்றே செய்துகொள்ளும் சுய-காயம், தற்கொலை அல்லது தற்கொலை முயற்சிகள், மனநலமின்மை அல்லது மன அழுத்தம் • பிறவி குறைபாடுகள், அவை உள்பிறவிக் குறைபாடாக அல்லது வெளிப்பிறவி குறைபாடாகவும் இருக்கலாம், பிறவி சார்ந்த உள் அல்லது வெளி நோய்கள், குறைபாடுகள் அல்லது அவைகளின் விளைவுகள் • பேக்டீரியா தொற்றுகள் (வெட்டு காயம் அல்லது விபத்து காரணமாக ஏற்படும் சீழுக்குத் தொற்றுகள் தவிர்த்து). • விபத்து காரணமாக மட்டுமே நேரடியாக ஏற்பட்டிருக்காத எந்த ஒரு நோய் அல்லது தொற்றினால் விளைந்திருக்கும் நிலைமை • பாலிசி ஆரம்பித்த தேதியிலிருந்து வாழ்க்கைத்தொழிலில் நிகழ்ந்த எந்த ஒரு மாற்றமும், அதனால் அபாய நிலைமை அதிகரித்திருத்தல், இது காப்பீடு பெற்றிருப்பவர் எங்களுக்குத் தெரிவித்து அதை நாங்களும் ஏற்றுக்கொண்டு சான்றளித்திருக்காத பட்சத்தில் • தொடக்க தேதிக்குப் பிறகு வாழ்க்கைத் தொழிலில் நிகழ்ந்த ஏதாவது மாற்றம் பாலிசியின் கீழ் எங்கள் அபாய அளவை அதிகரித்திருத்தல், இது எங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மற்றும் பாலிசி அட்டவணையில் அது எழுதப்பட்டிருக்காத பட்சத்தில். • விபத்து காரணமாக மற்றும் நேரடியாக விளைந்த நிலைமைக்குத் தேவைப்படுவது தவிர்த்த மருத்துவ அல்லது அறுவை சிகிச்சை நடவடிக்கைகள் • பதிவு செய்யப்பட்டிருக்கும் விமான நிறுவனங்களில் செயல்படும் அல்லது அங்கிருந்து வாடகைக்கு எடுக்கப்பட்ட அல்லது தனியாராக சொந்தத்தில் வைத்திருக்கும் ஒரு ஆகாய விமானத்தில் ஒரு பயணியாக (கட்டணம் செலுத்துபவராக அல்லது வேறு விதமாக) பயணிப்பதைத் தவிர்த்து வேறு எந்த பலூன் அல்லது ஆகாய விமானத்தில் ஏறுதல் அல்லது இறங்குதல் • காப்பீடு பெற்றிருப்பவர் ஏதாவது ஒரு அகாய விமானர்த்தை இயக்குபவராக அல்லது இயக்கக் கற்றுக்கொள்பவராக அல்லது பதிவு செய்யப்பட்டிருக்கும் ஆகாய விமான நிறுவனங்களின் பணியாளர் குழுவில் ஒரு உறுப்பினராக அல்லது ஆகாய விமான நிறுவன பணியாளராக இருத்தல் • போர் அல்லது போர் போன்ற நடவடிக்கைகள், உள்நாட்டு போர், படையெடுப்பு, வெளிநாட்டு எட்க்ஹிரிகளின் செயல்பாடுகள், புரட்சி, கிளர்ச்சி, கலகம், பயங்கரவாதம், இராணுவ நடவடிக்கை அல்லது சட்டவிரோத அதிகாரம், கைப்பற்றுதல், கட்டுப்படுத்துதல், கைது செய்தல், அல்லது தேசியமயமாக்குதல், தடுப்புக்காவல் அல்லது ஏதோ ஒரு அரசாங்க அல்லது பொது அதிகார அமைப்பின் உத்தரவைச் செயல்படுத்தும் விதமாகப் பறிமுதல் செய்தல். • அணு ஆயுதம், இரசாயனப் பொருள் அல்லது உயிரியல் காரணி மூலம் செய்யும் எந்தவொரு பயங்கரவாத செயலால் இழப்பு ஏற்பட்டாலும் சரி; அந்த இழப்புக்கு வேறு காரணங்கள் துணையாக இருந்திருந்தாலும்கூட, அவற்றையெல்லாம் கணக்கில் கொள்ளாமல் இந்தச் செயல் பொருந்தும் • கதிரியக்கம், இரசாயன, அணுசக்தி மாசுபாடு அல்லது கதிர்வீச்சு	

		• கடற்படை, வான்படை அல்லது இராணுவ நடவடிக்கைகள் அல்லது அவற்றைச் சார்ந்த படைகளில் அல்லது இராணுவச் செயல்பாடுகளில் அல்லது பாராமிலிடரி படையில் ஓர் அங்கமாக காப்பீடு பெற்றிருப்பவர் பங்கேற்றிருத்தல். • ஒரே வீட்டில் குடியிருக்கும் மருத்துவர் அல்லது காப்பீடு பெற்றிருப்பவர் குடும்ப உறுப்பினராக இருக்கும் மருத்துவர் அளிக்கும் சான்றிதழ். • இதர பிற செலவினங்கள் (அதில் குறிப்பிட்டிருப்பவை தவித்து) மருத்துவ செலவினங்கள் அல்லாத செலவினங்கள் பட்டியல் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருப்பவை • காப்பீடு பெற்றிருப்பவர் அறிவித்திருக்கும் ஏற்கனவே இருக்கும் நோய்கள், இவை அண்டர்ரைட்டிங்கில் பொருத்தப்பட்டும் உங்களால் / காப்பீடு பெற்றிருப்பவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்	
7	**காத்திருக்கும் காலம்**	• **முதல் முப்பது நாட்கள் காத்திருக்கும் காலம் (குறியீடு - எக்செல்03):** அனைத்து நோய்களுக்கும் 30 நாட்கள் (புதுப்பித்தலில் அல்லது விபத்துகளுக்குப் பொருந்தாது) • **தீவிர நோய்களுக்கான ஆரம்ப காத்த்திருக்கும் காலம்:** பாலிசி ஆவணத்தில் எழுதப்பட்டிருப்பது போல் அனைத்து தீவிர நோய்களுக்கும் 90 நாட்கள். • **குறிப்பிட்ட காத்திருக்கும் காலங்கள்:** குறிப்பிடப்பட்டிருக்கும் நோய்களுக்குக்கான சிகிச்சைக்கு 24 மாதங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் நோய்களில் இவை அடங்கும்: 1. கண்புரை 2. பிலியரி மற்றும் யூரினரி சிஸ்டம்களில் கற்கள் 3. குடலிறக்கம் / ஹைட்ரோசில் 4. எந்த ஒரு ஆரம்ப கோளாறுகளுக்கு ஹிஸ்டெரெக்டொமி 5. லம்ப்ஸ் / சிஸ்ட்ஸ் / நோடுல்ஸ் / பாலிப்ஸ் / உள்ளிருக்கும் புற்றுநோய் அல்லாத புற்றுக்கட்டிகள், தீங்கற்றதாக இல்லாத போது 6. கேஸ்டிரிக் மற்றும் டியூடினல் அல்சர்ஸ் 7. டான்சில்ஸ் / அடினாய்ட்ஸ் சர்ஜரி 8. ஆஸ்டியோஆர்த்ரோசிஸ் / ஆர்த்ரைடிஸ் / கௌட் / ருமாடிசம் / ஸ்பாடிலோசிஸ் / விபத்தினால் ஏற்பட்டிருக்காத வரையில் புரோலாப்ஸ் ஸ்பாண்டைலிடிஸ் / இன்டர்வெர்டெப்ரல் டிஸ்க் மற்றும் தண்டுவட நோய்கள் 9. ஃபிஸ்யூர் / ஃபிஸ்டுலா / ஹெமராய்ட் 10. சைனுசைடிஸ் / டிவியேடெட் நேசல் செப்டம் / டைம்பனோபிளாஸ்டி / குரோனிக் சப்புரேடிவ் ஓடிடிஸ் மீடியா 11. பினைன் புரோஸ்டேட் ஹைப்பர்டிரோஃபி 12. முழங்கால் / இடுப்பு மூட்டு மாற்றுறுப்பு மற்றும் லிகமென்ட், தசைநாண் அல்லது தசை கிழிவு 13. டைலடேஷன் மற்றும் க்யூரிட்டேஜ் 14. சுருள் சிரைகள் 15. பிறழ் கருப்பை உதிரப்போக்கு / கருப்பைச் சதைக்கட்டி / துருத்திய கருப்பை / எண்டோமெட்ரியோசிஸ் 16. க்ரோனிக் ரினல் ஃபெய்லியர் அல்லது எண்ட் ஸ்டேஜ் ரினல் ஃபெய்லியர் 17. உள்ளிருக்கும் உடன்பிறந்த முரண்பாடுகள் / நோய்கள் / கோளாறுகள • ஏற்கனவேயுள்ள நோய்கள் (குறியீடு - எக்செல் 01): தெரிவிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஏற்கனவேயுள்ள உள்ள நோய்களுக்கான காப்பீட்டுப் பாதுகாப்பிற்கு 3 ஆண்டுகள் காத்திருப்பு காலம் பொருந்தும். • ஐவிஎஃப் காப்பீட்டிற்கு: பாலிசி ஆரம்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 3 வருடங்கள் காத்திருக்கும் காலம் பொருந்தும். • மனநல சிகிச்சை: பாலிசி ஆரம்பமான தேதியிலிருந்து 36 மாதங்கள். • உடல் பருமன் அறுவை சிகிச்சை காப்பீடு - பாலிசி ஆரம்பமான தேதியிலிருந்து 3 வருடம் காத்திருப்பு காலம் பொருந்தும்	பிரிவு 3.1.3 பிரிவு 3.2.1 பிரிவு 3.1.2 பிரிவு 3.1.1 பிரிவு 2.9 பிரிவு 2.11 பிரிவு 2.10

8	**காப்பீட்டில் நிதிசார்ந்த வரம்புகள்**	**1. உள்-வரம்பு** (இந்த வரம்பு முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டது, இந்த வரம்பைக் கடந்து நாங்கள் தொகை செலுத்த மாட்டோம்) இழப்பு கிளெய்ம் ஒன்று செய்யப்படும் போது, கீழ்க்கண்ட செலவினங்களை நீங்கள் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று பாலிசி எதிர்பார்க்கும் - • அறை வாடகை சிங்கிள் பிரைவேட் ஏசி அறைக்கும் மிகையாக • கீழ்க்கண்ட குறிப்பிடப்பட்டிருக்கும் நோய்களுக்கு: • கண்புரை நோய் சிகிச்சைக்கு, ஒரு பாலிசி வருடத்தில் ஒரு கண்ணுக்காக உள்-வரம்பு பொருந்தும்: ரூ. 40,000	பிரிவு 2.1 பிரிவு 2.1
		2. இணை-தொகை செலுத்துதல் (இது ஒரு குறிப்பிடப்பட்ட தொகையாக இருக்கும் / அனுமதிக்கப்படும் கிளெய்ம் தொகையில் சதவிகிதமாக பாலிசிதாரர் / காப்பீடு பெற்றவர் செலுத்த வேண்டிய தொகையாக இருக்கும்) பாலிசி ஆரம்பமான தேதியில் காப்பீடு பெற்றிருப்பவர் வயது 61 வருடங்கள் அல்லது அதற்கு மிகையாக இருந்தால், அனுமதிக்கப்படும் ஒவ்வொரு கிளெய்ம்களிலும் 20% இணை தொகை செலுத்துவது பொருந்தும்.	பிரிவு 5.2
9	**இழப்பீடு கோரிக்கைகள் / கிளெய்ம் செய்யும் வழிமுறை**	**கேஷ்லெஸ் சேவைக்கு:** • வழக்கமான கிளெய்ம் படிவம் (பார்ட் A மற்றும் பார்ட் B) மற்றும் கேஷ்லெஸ் முன் அங்கீகாரம் கோரிக்கை படிவங்கள் எங்கள் இணையதளப் பக்கத்தில் www.magmainsurance.com தயாராகக் கிடைக்கின்றன. இப்படிவங்களை எங்கள் அலுவலகங்கள் ஒன்றிலிருந்து கோரிக்கை செய்து பெற்றுக்கொள்ளலாம். • கட்டணமில்லா தொலைபேசி எண்.: - 1800 266 3202 • எங்கள் இணையதளப் பக்கத்திலிருந்தும் www.magmainsurance.com மற்றும் எங்கள் டிபிஏ-ன் இணையதளப் பக்கத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். டிபிஏ வழங்கும் நெட்வொர்க் மருத்துவமனைகள் பட்டியல் மாற்றத்திற்கு உள்ளாகலாம் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். • கிளெய்ம் படிவங்களை https://www.magmainsurance.com/web/magmainsurance/ downloads இணையதளப் பக்கத்திலிருந்து பதிவிறக்கிக் கொள்ளலாம் • தேவைப்படும் விவர ஆவணங்கள் கிடைத்த ஒரு மணி நேரத்திற்குள் எங்கள் அனுமதி கடிதத்தை வலைப்பின்னல் சேவை வழங்குபவருக்கு அனுப்பி வைப்போம். • டிஸ்சார்ஜ் ஆகும் சமயத்தில், டிஸ்சார்ஜ் அனுமதி ஆவணத்துடன் தேவைப்படும் அனைத்து ஆவணங்களும் கிடைக்கப்பட்ட 3 மணி நேரத்திற்குள் இறுதி கேஷ்லெஸ் அங்கீகாரத்தை அனுப்பி வைப்போம்.	பிரிவு 5.5
		ரீஇம்பர்ஸ்மென்ட் கிளெய்ம்களுக்கு: • கிளெய்ம் செய்யப்படும் அறிவிப்பு: மருத்துவமனையில் சேர்க்கும் திட்டமிருந்தால், அதற்கு 72 மணி நேரத்திற்கு முன்னதாக எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அவசரக்கால நிலைமையில் மருத்துவமனையில் சேர்த்திருந்தால், மருத்துவமனையில் சேர்த்த 24 மணி நேரத்திற்குள் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். • கிளெய்ம் படிவத்தை அனுப்புதல்: காப்பீடு பெற்றவர் அனைத்து கிளெய்ம் ஆவணங்களையும் கட்டாயம் அனுப்பி வைக்க வேண்டும், கிளெய்ம் படிவம் (தேவைப்படும் அனைத்து ஆவணங்களுடன்) சமர்ப்பிக்கப்பட்ட 15 நாட்களுக்குள் கிளெய்ம் செட்டில் செய்யப்பட்டிருக்கிறதா அல்லது நிராகரிக்கப்பட்டிருக்கிறதா என்பது அறிவிக்கப்படும்.	பிரிவு 5.5

10	**பாலிசிக்கு சேவை வழங்குதல்**	இந்த எண்ணில் எங்களை அழையுங்கள்: 1800 266 3202 முகவரி: வேலை நேரத்தில் எங்கள் கிளை அலுவலகங்களில் ஒன்றுடன் அல்லது எங்கள் கார்பொரேட் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம். கிளை அலுவலகங்களில் பட்டியல் www.magmainsurance.com கிடைக்கும்	
11	**குறைதீர்த்தல் / குறை தெரிவித்தல்**	மூத்த குடிமக்கள் உள்ளிட்ட காப்பீடு பெற்றிருப்பவர் / பாலிசிதாரர் ஒருவேளை குறைகளைக் கூற விரும்பினால், கீழ்க்கண்ட வழிமுறைகளில் அவர் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளலாம்: இணையதளம்: www.magmainsurance.com கட்டணமில்லா தொலைபேசி எண்.: 1800 266 3202 மின்னஞ்சல் முகவரி: customercare@magmainsurance.com. மூத்த குடிமக்களுக்கான மின்னஞ்சல் முகவரி - namaskar@magmainsurance.com மூத்த குடிமக்களுக்கான பிரத்தியேக சிறப்பு ஹெல்ப்லைன் - 022-62605766 வாடிக்கையாளர்கள் கிளை குறை தீர்ப்பு அலுவருடனும் தொடர்பு கொள்ளலாம். மின்னஞ்சல் முகவரி: Gro@magmainsurance.com **ஐஆர்டிஏஐ குறைதீர்த்தல் அமைப்பு:** கட்டணமில்லா தொலைபேசி எண்.: 155255 (அல்லது) 1800 4254 732 நேரம்: காலை 8:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை - (திங்கள் முதல் சனிக்கிழமை வரை) நிறுவனம் வழங்கும் பிரச்சனைக்கான தீர்வில் நீங்கள் ஒருவேளை சமாதானமடையவில்லை என்றால், ஐஆர்டிஏ-வின் ஆன்லைன் போர்டலில் - பீமா பரோசா சிஸ்டம் - https://bimabharosa.irdai.gov.in/ நீங்கள் உங்கள் புகாரை நேரடியாகப் பதிவு செய்யலாம். **ஓம்பட்ஸ்மேன்:** ஒருவேளை நீங்கள் இன்னமும் தீர்வில் திருப்தி அடையவில்லை என்றால், நீங்கள் புகாரை பதிவு செய்துகொண்ட வரையறுக்கப்பட்ட 30 நாட்களுக்குப் பிறகு இன்ஸ்யூரன்ஸ் ஓம்பட்ஸ்மேன் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு மேல்முறையீடு செய்துகொள்ளலாம். புதுப்பிக்கப்பட்ட தகவலைத் தெரிந்துகொள்ள www.irdai.gov.in அல்லது https://www.cioins.co.in இணையதளப் பக்கங்களைப் பார்க்கவும்.	பிரிவு 4.1.16 பிற்சேர்க்கை I
12	**இவற்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்**	**இலவச பார்வை நீக்கல்:** ஒருவேளை நீங்கள் இந்த இன்ஸ்யூரன்ஸ் பாலிசியை ரத்து செய்ய விரும்பினால், பாலிசி ஆரம்ப தேதியிலிருந்து 30 நாட்களுக்கும் அதை ரத்து செய்துவிடலாம். செயல்பாடு சம்பந்தப்பட்ட இலவச பார்வைக்கு இந்த எண்ணில் எங்களைக் கூப்பிடுங்கள் 1800 266 3202 **பாலிசியைப் புதுப்பித்தல்:** காப்பீடு பெற்றிருப்பவர் நிகழ்த்தியிருக்கும் மோசடி, தகவல் வெளிப்படுத்தாமை அல்லது உண்மைக்குப் புறம்பான தகவல் அளித்தல் காரணங்களைத் தவிர, இந்த பாலிசி பொதுவாக புதுப்பிக்கத்தக்கதாக இருக்கும். **பெயர்வு மற்றும் கையாண்மை:** உங்கள் பாலிசியைப் புதுப்பிக்கும் காலத்தில் அதை எங்களிடம் மற்றொரு பாலிசிக்கு மாற்றிக்கொள்ளலாம் அல்லது உங்கள் பாலிசியை மற்றொரு காப்பீட்டு நிறுவனத்திடம் மாற்றிக் கொள்ளலாம். **காப்புறுதி தொகையை மாற்றுதல்:** காப்புறுதி தொகையை மாற்றிக்கொள்ள (அதிகமாக / குறைவாக) புதுப்பித்தலின் போது மட்டுமே முடியும் அல்லது நிறுவனம் ஒப்புறுதி அளிக்கும் சமயத்தில் சம்மதிப்பதைத் தொடர்ந்து மாற்றிக்கொள்ள முடியும். காப்புறுதி தொகை அதிகரித்திருக்கும் போது, குறிப்பிடப்பட்டிருக்கும் காத்திருக்கும் காலம் அதிகரிக்கப்பட்ட தொகைக்கு மட்டும் புதிதாக தொடங்கும்.	பிரிவு 4.1.15 பிரிவு 4.1.10 பிரிவு 4.1.8 மற்றும் 4.1.9 பிரிவு 5.3

		அவகாச காலம்: இந்த பாலிசியின் கீழ் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் முடிந்த பிறகு பின்னோக்குதல் எதுவும் செயல்படுத்தப்படாது. இந்த ஐந்து ஆண்டு காலத்தை அவகாச காலம் என்று புரிந்துகொள்ளப்படும். எங்களிடம் பெறப்பட்டிருக்கும் முதல் பாலிசியில் காப்புறுதி தொகைக்கு அவகாச காலம் பொருந்தும், பிறகு காப்புறுதி தொகை அதிகரிக்கப்பட்ட தேதியிலிருந்து அடுத்த தொடர்ந்த ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதிகரிக்கப்பட்ட காப்புறுதி தொகை மீது மட்டும் அவகாசகாலம் பொருந்தும். அவகாச காலம் முடிந்துவிட்ட பிறகு, இந்த பாலிசியின் கீழ் செய்யப்படும் கிளெய்ம் எதுவும், பாலிசியில் எழுதப்பட்டிருக்கும் நிரூபிக்கப்பட்ட மோசடி மற்றும் நிரந்தரமாக விலக்கப்பட்டவை தவிர்த்து, விவாதிக்கப்பட மாட்டாது.	பிரிவு 4.1.12
13	**உங்கள் பொறுப்புகள்**	இந்த பாலிசியை வாங்கும் முன்னர் உங்களுக்கு ஏற்கனவே இருக்கும் அனைத்து நோய்/கள் விவரங்களை அல்லது நோய் நிலைமை/களை எங்களுக்குத் தெரிவித்துவிட வேண்டும். விவரங்களைத் தெரிவிக்காவிட்டால், கிளெய்ம் செட்டில்மென்ட் பாதிக்கப்படும். ''முக்கியமான விவரங்களை'' (பொருள்படும் உண்மைகள்) பாலிசி காலத்தில் தெரிவித்தல். பொருள்படும் உண்மைகள் - புரபோசல் படிவம் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆவணங்களில் நிறுவனம் கோரிக்கை செய்து பெற்றிருக்கும் பொருந்தும் விவரங்கள் அடிப்படையில் தகவலறிந்த முறையில் அபாயத்தை ஒப்புறுதி செய்ய இந்த விவரங்கள் நிறுவனத்திற்கு உதவியாக இருக்கும். உங்கள் தொழில் வாழ்க்கையில் அல்லது பிசினெஸில் ஏதேனும் மாற்றங்கள் நிகழ்ந்து அதனால் அபாய அளவில் பொருள்படும்படியான மாற்றங்கள் நிகழ்ந்தால் தயவுசெய்து அவற்றை எங்களுக்கு எழுத்துபூர்வமாகத் தெரிவியுங்கள்.	பிரிவு 4.1.1 பிரிவு 4.2.8

பாலிசிதாரர் செய்துகொள்ளும் அறிவிப்பு

☐ நான் இவற்றைப் படித்துப் பார்த்து அதன் விவரங்களைப் புரிந்து கொண்டுள்ளேன்.

இடம்:

தேதி: (பாலிசிதாரரின் கையொப்பம்)

கவனிக்கவும்: (i) வாடிக்கையாளர் தகவல் தாள் உட்பட புராடெக்ட் சம்பந்தப்பட்ட ஆவணங்களுக்கு, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் லிங்க்-ல் பார்க்கவும் (www.magmainsurance.com/web/magmainsurance/downloads)

(ii) ஏதாவது பிரச்சனை எழுமானால், இந்த பாலிசி ஆவணத்தில் எழுதப்பட்டிருக்கும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் படி தீர்த்துக்கொள்ளப்படும்.